**D E P O S I T I O N  O F  W I T N E S S**

**--------**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM**

**O.S.No.407/2023**

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | **ஈஸ்வரமூர்த்தி** | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**04.11.2025.**

**வா.சா. 2 : ஈஸ்வரமூர்த்தி**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 6ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கிரைய ஆவணத்தை நான் படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். மேற்படி கிரைய ஆவணம் ரங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை தங்கவேல் என்பவர் வாங்கிய தொடர்பான கிரைய ஆவணம் ஆகும். 2, 3 மைனர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை இறந்துபோன ரங்கசாமியின் மனைவி கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மைனர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் எழுதி கொடுக்கவேண்டும் என்றால் நீதிமன்றத்தில் முன்கூட்டியே அனுமதி வாங்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அனுமதி வாங்கவேண்டிய விவரத்தை பற்றி பத்திரத்தில் படித்துப்பார்த்து நான் கையொப்பம் செய்தேனா என்றால் படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். 23.09.2021ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் மைனரின் சார்பாக சொத்தினை விற்பனை செய்ய நீதிமன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். நான் வாதிக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இறந்துபோன ரங்கசாமியின் வாரிசுகளான 2, 3 பிரதிவாதிகள் பெயரில் தொகை ஏதேனும் வைப்பீடு செய்யப்பட்டதா என்றால் கரூர் வைசியா வங்கியில் 2, 3 பிரதிவாதிகள் பெயரில் தலா ரூ.4,00,000/- வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்குவிசாரணை**

தொகை வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டபோது நானும் உடன் சென்றேனா என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.